# சுற்றுச்சூழல் – வனத்துறை

# 2009 – 2010 ஆம் ஆண்டிற்கான

# புதிய அறிவிப்புகள்

## வனத்துறை

**அ. தரங்குன்றிய காடுகளை மீட்டெடுத்தல்**

1. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினை 2009 – 10 ஆம் ஆண்டில் மாநில அரசு உதவியுடன் ரூ. 23.70 கோடி செலவில் 150 கிராமங்களில் உள்ள தரங்குன்றிய காடுகளில் 31,050 ஹெக்டேர் பரப்பில் காடு வளர்ப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ள உத்தேசிக்கப்– பட்டுள்ளது.

2. 2009 – 10 ஆம் ஆண்டில் 32 மாவட்டங்களில் 150 பழங்குடியினர் கிராமங்களை உள்ளடக்கிய 800 கிராமங்களில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட 1,70,500 எக்டர் தோட்டங்களின் பராமரிப்புப் பணிகள், சமுதாய நலப்பணிகள் மற்றும் வருவாயினைப்பெருக்க நடவடிக்கைகள் ரூ. 32.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

**ஆ. தமிழ்நாடு இயற்கைவள மாறாநிலை மேலாண்மை திட்டம்**

3. தமிழகத்தில் உள்ள இயற்கை வளங்களை முறையாக பராமரிக்கவும் அதனை மாறா நிலையுடன் மேலாண்மை செய்யவும் மேலும் அதனை அதிகரிக்க ரூ. 635.62 கோடி மதிப்பீட்டில் எட்டு ஆண்டுக்கான ஒரு பெரும் திட்டம் தயாரிக்கப்பட்டு ஜப்பான் நாட்டு சர்வதேச கூட்டுறவு கழகத்தின் வெளிநாட்டு நிதி உதவி பெற மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

**இ. மரங்கள் வளர்ச்சிப் பரப்பை அதிக்கப்படுத்துதல்**

(அ) படுகை தேக்கு மரத்திட்டம்

4. எதிர்கால தடி மரத் தேவையினை பூர்த்தி செய்திட புதிதாக 6900 எக்டேர் பரப்பில் படுகை நிலங்களில் தேக்கு மரத் தோட்டங்கள் எழுப்பும் பணியும் சென்ற ஆண்டுகளில் உருவாக்கப்பட்டத் தேக்குத் தோட்டங்களை பராமரிக்கவும் 2009 – 10 ஆம் ஆண்டில் ரூ. 8.67 கோடி செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

(ஆ) தனியார் நிலங்களில் மரவளர்ப்புத் திட்டம்

5. நாட்டில் முதன்முறையாக தமிழகத்தில் 2007 – 2008 ஆம் ஆண்டு தனியார் நிலங்களில் மரவளர்ப்பு என்னும் ஓர் திட்டம் புதிதாக செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்தினை ரூ. 10.00 கோடி செலவில் 2009 – 10 ஆம் ஆண்டிலும் செயல்படுத்திட திட்டமிடப் பட்டுள்ளது.

(இ) நகர்புற வனவியல்

6. வாகனங்கள் மற்றும் தொழிற்சாலை களிலிருந்து வெளிப்படும் நச்சு கலந்த புகையினால் ஏற்படும் கேடுகளை குறைக்க நகர்புறங்களில் மரங்களை நடுவதற்காக மதுரை மற்றும் சென்னை மாவட்டங்களில் ரூ. 0.75 கோடி செலவில் தமிழ்நாடு வன மேம்பாட்டு நிதி மூலம் 19,000 நாற்றுகள் உற்பத்தி செய்து நடப்படும்.

ஈ. பல்லுயிர் பெருக்கப் பாதுகாப்பு

7. காடுகளுக்கு வெளியே இருக்கும் தேசிய பூங்கா மற்றும் வன உயிரின சரணாலயங்கள் இவைகளில் இருக்கும் வன உயிரினங்களை பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. 2009 – 2010 ஆண்டில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே உள்ள வன உயிரினங்களை பாதுகாக்க இந்திய அரசிடமிருந்து ரூ. 0.30 கோடி அளவில் நிதியுதவி பெற்று செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. அழிந்து வரும் அபாய கட்டத்திலுள்ள நீலகிரி வரையாடு, பிணம் திண்ணி கழுகுகள், கடல் ஆமைகள், கடல்பசு போன்றவைகளை தனித்தனியே பாதுகாப்பதற்காக 2009 – 2010 ஆண்டில் ரூ. 0.20 கோடி ஒதுக்கப்பட்டு பாதுகாப்பு பணிகள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9. வேலூர் மண்டலத்தில் உள்ள அமிர்தி சிறு உயிரின காட்சி சாலையில் 2009 – 2010 ஆம் ஆண்டில் ரூ. 0.50 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

10. மனிதர்களுக்கும் வன உயிரினங்களுக்கும் ஏற்படும் மோதலைத் தடுக்க 2009 – 2010 ஆம் ஆண்டில் சுமார் 340 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின்வேலி ரூ. 5.44 கோடி செலவில் வனத்தையொட்டிய பாதிப்படையக்கூடியப் பகுதிகளில் அமைத்திட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

11. யானைகள், காட்டு எருமைகள் மற்றும் மான்கள் போன்றவை அவை வாழும் இடங்களை விட்டு வெளியே செல்லாமல் தடுக்க 2009 – 2010 ஆம் ஆண்டில் ரூ. 0.30 கோடி செலவில் 25 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதிப்படையக்கூடியப் பகுதிகளில் யானை அகழிகள் அமைக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

12. மனித – வன உயிரின மோதல்கள் என்பது முன்பெல்லாம் மிகுந்த குறைவான நிகழ்வாக இருந்தாலும், தற்போது, நாளுக்கு நாள் நடைபெறும் முக்கியத்துவம் வாய்ந்த தீவிர இடையூறாக ஆகிவிட்டது எனவே, 2009 – 2010 ஆம் ஆண்டில் ரூ.1 கோடி அளவில், இழப்பீடுத் தொகை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13. இந்திய வன உயிரின நிறுவனம், சமீபத்தில் நடத்திய 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும். புலிகளின் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் புலிகளின் எண்ணிக்கை 25 விழுக்காடு அதாவது 62லிருந்து 76 ஆக உயர்ந்துள்ளது எனத் தெரிவித்துள்ளது. 2009 – 2010ம் ஆண்டில் ரூ. 11.33 கோடி

அளவில், மூன்று புலிகள் காப்பகங்களின் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டுள்ளது.

14. ஈர நிலத் தொகுப்புப் பகுதிகளான கோடியக்கரை, கழுவேலி, பள்ளிக்கரணை மற்றும் முத்துப்பேட்டை சதுப்பு நிலக்காடுகள் போன்ற இடங்களை 2009 – 10ம் ஆண்டில் ரூ. 3.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தவும் பாதுகாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உ. வனங்கள் வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு**

15. 2009 – 10 ஆம் ஆண்டில் வன எல்லைகளை வரையறுத்து ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்திட 5333 எல்லைக் கற்கள் ரூ.0.64 கோடி செலவில் நட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

16. பழங்குடியினர் மற்றும் வனங்களைச் சார்ந்து வாழும் இதர உள்ளூர் மக்களுக்கு சிறந்த சாலை வசதி தொடர்பினை ஏற்படுத்த 93.200 கி.மீ நீளமுள்ள வனச்சாலைகளை 2009 – 2010 ஆம் ஆண்டில் ரூ. 10.43 கோடி செலவில் பராமரித்து மேம்படுத்தப்படும்.

17. வன ஒருங்கிணைந்த பாதுகாப்பு திட்டம் நான்கு புதிய பணிகளுடன் தீவிர வன மேலாண்மை திட்டமாக செயல்படுத்த இத்திட்டம் ரூ. 4.10 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

18. 2009 – 2010 ஆம் ஆண்டு ரூ. 4.65 கோடி செலவில் பகுதி இரண்டு திட்டப்பணிகள் செயலாக்கப்படும்.

**ஊ. தமிழ்நாடு மாநில சூழல் சுற்றுலா கொள்கை**

19. மக்கள் பெரிதும் பயனுறும் வகையிலும், சுற்றுப்புறத்திற்கு யாதொரு பாதிப்பும் ஏற்படாத வண்ணமும், சுற்றுலா நடவடிக்கைகளை செயல்படுத்த வழிவகை செய்யும்

நெறிமுறைகளை உள்ளடக்கிய மாநில சூழல் சுற்றுலா கொள்கை ஒன்று அறிவிக்கப்படும்.

எ. **சூழல் சுற்றுலா**

20. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் ரூ. 19.50 கோடி செலவில் பிச்சாவரம், முண்டந்துறை புலிகள் காப்பகப் பகுதி, அகத்தியர் நீர் வீழ்ச்சி ஆகிய இடங்களில் சூழல் சுற்றுலா பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு 2009 – 2010ஆம் ஆண்டில் ரூ. 0.10 கோடி செலவில் முன்னோட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும் .

ஏ. **வனப் பணியாளர்களுக்கு நுண்ணறிவு பயிற்சி**

21. வனப்பகுதிகளில் ரோந்து செல்லும் போது வனப் பணியாளர்கள் கடைபிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை, அதிரடி மற்றும் தற்காப்பு உத்திகள் குறித்து 2009 – 2010 ஆம் ஆண்டில் ரூ. 0.05 கோடி செலவில் 150 வனக்காப்பாளர்களுக்கு சத்தியமங்கலம் சிறப்பு அதிரடிப்படை முகாமில் பயிற்சி தரப்பட உள்ளது.

ஐ. **மண்வள மற்றும் ஈரப்பத பாதுகாப்பு**

22. 2009 – 2010 ஆம் ஆண்டில் ரூ. 1. கோடி செலவில் கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் செயற்கை முறை நீரேற்றுத் திட்டத்தின் கீழ் மண்வள மற்றும் ஈரப்பதம் காக்கும் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒ. **பணியாளர்கள் நலன்**

23. சென்னை, தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு மற்றும் விருதுநகர் மண்டல அலுவலகங்களில் மண்டல நிர்வாக வசதியினை மேம்படுத்த கூடுதலாக ஐந்து நேர்முக உதவியாளர் பணியிடங்கள் ஏற்படுத்திட உத்தேசிக்கப்– பட்டுள்ளது.

24. பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வனக்காவலர் பணி வழங்கும் பொருட்டு அரசுக்கு காலிப்பணியிட மதிப்பீடு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. மொத்த காலி

பணியிடங்களான 197–ல் 25 விழுக்காடு வனக்காவலர் பணியிடங்களை அதாவது 49 வனக்காவலர் பணியிடங்களை இறந்த அரசுப்பணியாளர்களின் தகுதி பெற்ற வாரிசுகள் மூலம் கருணை அடிப்படையில் அரசுப்பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 49 நபர்களுக்கு வனக்காவலர் பணியிடம் வழங்க ஆணையிடப்பட்டு பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

25. தமிழ்நாடு காவல் துறையில் உள்ளது போல் பணியாளர்களே அருகிலுள்ள நியாய விலைக்கடைகளில் சலுகை விலையில் குடும்ப அட்டை மூலம் அத்தியாவசிய பொருட்களை நேரடியாக பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் 6014 பணியாளர்கள் பயனடைவர்.

**ஒ. வன ஆணையம்**

26. அரசாணை எண். 87, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (வனம் சிறப்பு (அ) நாள் 14.08.2007ல் மாநில வன ஆணையம் அமைத்து அரசாணை வழங்கப்பட்டது. சிறந்த வன மேலாண்மை, சிறந்த வனத்துறை நிர்வாகம், வனப் பணியாளர்களின் நலன்கள், மேம்பாடு மற்றும் பொதுமக்களுக்கும் வனப்பணியாளர் களுக்கும் இடையே சிறந்த நட்புறவு போன்ற செயல்பாடுகளின் மீது பெறப்படும் வன ஆணையத்தின் பரிந்துரைகள் பெற்றவுடன் துரிதமமாக செயல்படுத்தப்படும்.

**ஔ. பள்ளிக்கரணை ஈரநிலப் பாதுகாப்பு**

27. பள்ளிக்கரணை சென்னைக்கு அருகாமை– யிலுள்ள ஓர் தனித்தன்மை வாய்ந்த நன்னீர் ஈர நிலமாகும். எண்ணற்ற நீர் வாழ் பறவையினங்களுக்கு முக்கிய உறைவிடமாக அமைந்துள்ளது. சென்னையின் அருகாமையில் உள்ள இத்தனித்தன்மை வாய்ந்த பகுதி ஆக்கிரமிக்குள்ளாகும் அபாயத்தில் உள்ளது. 2009 – 10 ஆம் ஆண்டில் பள்ளிக்கரணை ஈரநிலத்தில் ஆக்கிரமிப்பினை தடுக்க ரூ. 1.176 கோடி செலவில் சுற்றுச்சுவர் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அ. அ. ஊராட்சி வளர்ச்சியில் வனத்துறையின் பங்கு**

28. தமிழக அரசு, சமூகக்காடுகள் மூலமாக நிகர வருவாயில் ஊராட்சிகள் மற்றும் வனத்துறைகளுக்கிடையே முறையே 75:25 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளவும், மொத்த வருவாயில் பணியாளர்களுக்கான சம்பளச் செலவினம் 35% மேல் போகாமல் இருக்கவேண்டும் என்றும் இதற்கு மேல் ஆகும் செலவினம் அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் எடுக்கப்பட்ட முடிவின்படி, 2004 – 05ம் ஆண்டு முதல் 2007 – 08ம் ஆண்டு வரை தீர்வு செய்யப்பட வேண்டிய நான்காண்டுகளுக்குரிய பங்குத் தொகை ரூ. 20.61 கோடியினை உரிய ஊராட்சிகளுக்கு நடப்பாண்டில் விடுவிக்கப்படும்.

**அ.ஆ. தினக்கூலி தோட்டக்காவலர்களுக்கு பணியிடம் வழங்கி முறைப்படுத்துதல்**

29. வனத்துறையில் 1979–ம் ஆண்டு முதல் வனச் செல்வங்களைப் பாதுகாக்கவும் சமூக வனங்களை உருவாக்கவும் தோட்டக்காவலர் மற்றும் சமூக வன ஊழியர் ஆகியோர் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு வளமான ஒரு எதிர்காலத்தை வழங்கும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1999 ஆம் ஆண்டு பிறப்பித்த ஆணையின் அடிப்படையில் மாநில அளவிலான ஒரு முதுநிலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டது. 5497 நபர்களைக் கொண்ட இந்தப் பட்டியலில் முதுநிலையின் அடிப்படையில் அவர்களுக்கு அவர்களது தகுதியின் அடிப்படையில் வனக்காவலர், மாலி, அலுவலக உதவியாளர், அலுவலகக்காவலர், இல்லக் காவலர், ஒட்டுநர் ஆகிய பதவிகளில் நிரந்தரப் பணி வழங்கப்பட்டு வருகிறது. முதுநிலைப் பட்டியலில் இடம்பெற்றுள்ள பலர் 16 ஆண்டுகள் முதல் 30 ஆண்டுகள் வரை தினக்கூலி அடிப்படையிலேயே பணிபுரிந்து வருகின்றனர். இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள மீதம் உள்ள 3058 நபர்களில் தினக்கூலி அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து வரும் அனைவரையும் ரூ.2500 –5000 மற்றும் தர ஊதியம் ரூ.500/– என்ற சிறப்பு ஊதிய விகிதத்தில் ‘தோட்டக் காவலர்’ என்ற புதிய

பதவியிடத்தில் பணியமர்த்த சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இவர்கள் அனைவருக்கும் பணியிடம்வழங்கப்பட்டு முறைப்படுத்தப்படுவர்.

**என். செல்வராஜ்**
**அமைச்சர் – வனம்**